பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 புரட்டாசி 21 ஷவ்வா 23 இதழ் 237
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7-10-77

விற்பனைக்கு
வேம்பினின்றும்
நவீன முறையில் தயாரான
"நிம் சுகாதார தூபம்"
நறுமணம் கமழ்ந்து, நுளம்பு,
பூச்சி, புழு ஆகியவற்றை
அற்புதமாக அகற்றுகின்றது.
வாங்கி உபயோகியுங்கள்.
மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண். 77,
யாழ்ப்பாணம்.

# கிளர்ச்சி இளைஞர் விடுதலையாவர்!

## தேசிய அரசுப் பேரவையில் பிரேரணை நிறைவேறியது!

கொழும்பு, வியா. 1971-ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்டு, கைதுசெய்யப்பட்டு, இப்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என்று கோரும் பிரேரணை, நேற்று தேசிய அரசுப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

மிருந்தலைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் கொண்டுவந்த இந்த தனிநபர் பிரேரணை 75 வாக்குகளால் நிறைவேறியது. வாக்களிப்பின்போது எதிர்க்கட்சி தரப்பில் ஒரு உறுப்பினரும் சபையில் இருக்கவில்லை.

இத்தீர்மானத்தின்மீது அகலவத்தைத் தொகுதி தேசிய அரசு பேரவை உறுப்பினர் திரு மெனில் காரியவாசம் பேசுகையில், "71-ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியைப் போல் விரைவில் வடக்கிலும் புரட்சியொன்று உருவாகும். முன்னைய புரட்சிக்கு ஆட்சி செய்த அரசாங்கமே காரணமாக இருந்தது வடக்கிலே தலைதூக்கும் புரட்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினரே பொறுப்பேற்கவேண்டும் இது நடைபெறுமலிருக்க தமிழர் விடுதலைக்கூட்டணி இப்போதே பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தடுக்கவேண்டும்" என்று கூறினார்

திரு. மெனில் காரியவாசகம் தொடர்ந்துபேசுகையில்; 71-ம் ஆண்டு கிளர்ச்சியைப்போல் வடக்கிலே உருவாகுமானால், தென்னிலங்கையிலே வாழும் தமிழர்களின் நிலையை கூட்டணியினர் சிந்திக்கவேண்டும் என்றார்.

மானிப்பாய் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில்; "71-ம் ஆண்டு கிளர்ச்சியில், சம்பந்தப்பட்டவர்கள் படிக்காதவர்களோ, அல்லது அறிவு குறைந்தவர்களோ ஈடுபடவில்லை. படித்துப் பட்டம் பெற்றவர்களும், இளம் சந்ததியினரும் ஈடுபட்டிருந்தார்கள். இவர்களை விடுதலைசெய்வதற்குமுன் ஏன் இவர்கள் புரட்சிகளில் ஈடுபட்டார்கள் என்பதை அரசு ஆராயவேண்டும் என்றார். '45 தமிழ் இளைஞர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தமிழ் இளைஞர்கள் [illegible] அரசு இதே மாதிரி நீதியான முறையில் நடந்துகொள்ளவேண்டும்" எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

"ஏப்ரல் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் மட்டும் சிறையிலே இருக்கும்போது, இதில் சம்பந்தப்பட்ட பெரியவர்கள் வெளியில் உலாவி வருகின்றார்கள்" என்றும் திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

மாவத்தகம தேசிய பேரவை உறுப்பினர் திரு. ஜே. எம். பிரேமச்சந்திரா பேசுகையில்; "71-ம் ஆண்டுக் கிளர்ச்சியில் அரசு சர்வாதிகாரமாக நடந்து அனேக உயிர்களை சுட்டுப் போசுக்கியுள்ளது" என்றார். (ம)

யாழ். நகரில்

## சைக்கிளில் 'டபிள்' மீண்டும் அனுமதி!

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். நகரில் சைக்கிளில் இருவர் பிரயாணம் (டபிள்) செல்வதற்கு யாழ். பொலிசார் இப்பொழுது அனுமதி வழங்கியுள்ளனர்.

மாணவர்களினதும் வேலைக்குச் செல்வோரினதும் நன்மை கருதி யாழ். நகரில் சைக்கிளில் இருவர் செல்வதை பொலிசார் அனுமதிக்க வேண்டும் என்று யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் யாழ். பொலிஸ் அதிபருக்கு விடுத்திருந்த கோரிக்கையைத் தொடர்ந்து மேற்படி சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸ் அதிபர் திரு. எஸ் டி. பி. ரன்முத்து கலவுடனும், இணைப்பதிகாரியுடனும் திரு. க. சிவஞானம் தொடர்பு கொண்டு போக்குவரத்துச் சிரமத்தினையும் மாணவர்களும் பயணிகளும் இவற்றால் படும் இன்னல்களையும் எடுத்துக் காட்டி யாழ்ப்பாணப்பகுதியில் 'டபிள்' செல்ல அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட யாழ் பொலிஸ் அதிபர் இன்று முதல் மீண்டும் யாழ். நகரப் பகுதியில் 'டபிள்' செல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

யாழ் நகரில் சைக்கிளில் 'டபிள்' செல்வதை முன்னர் பொலிசார் அனுமதித்திருந்தும் பின்னர் இச்சலுகையை வாபஸ் பெற்றுக்கொண்டதும் வாசகர்கள் அறிந்ததே (கா)

கடத்தல்காரரை ஒப்படைக்க

## அல்ஜீரியா மறுப்பு!

அல்ஜியர்ஸ், அக். 6 ஜப்பானிய விமானக் கடத்தல்காரர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு ஜப்பானிய அரசு விடுத்த கோரிக்கையை அல்ஜீரிய அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

ஜப்பானிய விமானத்தைக் கடத்திய செம்படையினர் தங்களின் சக கைதிகளுடனும் அறுபது லட்சம் டாலர் பணத்துடனும் அல்ஜீரிய அரசாங்கத்திடம் சரணடைந்திருந்தனர். இவர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு ஜப்பானிய அரசு கோரிக்கைவிடுத்தது. இவர்களை ஒப்படைத்து ஜப்பானில் மனிதாபிமானமற்ற முறையில்நடத்தப்படுவதை அல்ஜீரியா விரும்பவில்லை என்று ஜப்பானுக்கு அல்ஜீரிய அரசு அறிவித்துள்ளது.

## லயன்ஸ் கழகத்தின் உலக சேவைத்தினம்

### யாழ். கழகம் விரிவான ஏற்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். லயன்ஸ் கழகம் உலக சேவைத் தினக் கொண்டாட்டத்தையொட்டி விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வைத்திய உதவிகள், இலவச தடுப்பு மருந்து விநியோகம், அகதிகளுக்கு நிதி திரட்டுதல், குடும்பப் பெண்களுக்கு ஆலோசனை, விவசாய ஊக்குவிப்பு, கண் பார்வை குறைந்தவர்களுக்கு ஊன்று கோல் அன்பளிப்பு, சிரமதானப் பணி போன்ற பொதுப் பணிகளில் லயன்ஸ் கழகம் ஈடுபடவிருக்கிறது.

இத்தினத்தை 20 லட்சம் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் உலகம் அடங்கிலுமுள்ள 150 நாடுகளில் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

நாளைய தினம் யாழ் லயன்ஸ் கழகத்தின் சார்பில் குருநகர்ப் பகுதியில் பி. ஸி. ஸி. தடுப்பு மருந்து விநியோகித்தல், இலவச வைத்திய உதவி, வீட்டுத் தோட்டம், மிருக வளர்ப்பு

(6-ம் பக்கம் பார்க்க)

ஏனையவளாகத்திற்கு தெரிவான

## தமிழ்மாணவர் விரும்பினல் யாழ். வளாகத்தில் அனுமதி

கொழும்பு, வியாழன் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ். வளாகம் தவிர்ந்த ஏனைய வளாகங்களில் புதிதாக இம்முறை அனுமதிபெற்றிருக்கும் தமிழ் மாணவர்கள் விரும்பும் பட்சத்தில் அவர்களுக்கு யாழ். வளாகத்தில் தமது சட்டப்படிப்பை மேற்கொள்ள அனுமதிக்கப்படும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

முதலாம் வருட கலை, விஞ்ஞானபீட தமிழ் மாணவர்களுக்கு மட்டுமே இச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக அனுமதிக்கப்படும் மாணவர்கள் தமது பட்டப்படிப்பு முழுமையையும் யாழ் வளாகத்திலேயே தொடரவேண்டும் எனவும் பின்னர் வளாக இடமாற்றங்கள் அனுமதிக்கப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வளாகத்தில் கல்வி கற்கவிரும்பும் ஏனைய வளாக தமிழ் மாணவர்கள் உடன் சகல விபரங்களுடன் தமக்கு விண்ணப்பிக்குமாறும் பதிவாளர் தெரிவித்துள்ளார். (கி-இ)

## யாழ். நகரில் ஒருவழிப்பாதை சட்டம் அமுல்

யாழ்ப்பாணம், வெள்ளி ஒருவழிப்பாதைச் சட்டத்தை மீறுவோர் நேற்றுப் பொலிசாரின் பிடிக்குள் சிக்கினர்.

கஸ்தூரியார் வீதி உட்பட ஒருவழிப்பாதைச் சட்டத்தை மீறியவர்கள் பலர் பொலிசாரால் எச்சரிக்கை செய்யப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

நேற்று நீண்ட நாட்களுக்குப் பின் பொலிசார் இருவர் இருவராக நகரின் பிரதான சந்திகளில் நின்று போக்குவரத்துக்களைக் கண்காணிப்பதில் ஈடுபட்டிருந்தனர். (கி-அ)

இந்திராகாந்தி விடுதலை

## அரசு அப்பீல் மனுமீது இன்று விசாரணை

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை டில்லிநகர நீதிமன்றம் விடுதலை செய்ததை ஆட்சேபித்து இந்திய அரசாங்கம் தாக்கல் செய்த அப்பீல் மனு மீது இன்று டில்லி மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறும்.

திருமதி இந்திராகாந்தியை நிபந்தனையின்றி விடுதலை செய்ததற்கு எதிராக அரசாங்கம், உயர் நீதிமன்றத்தில் செய்துகொண்ட அப்பீல் மனு மீதான விசாரணை நேற்று நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டபோதிலும் நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாக சில பிரச்னைகள் எழுந்ததால் இந்த அப்பீல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை என்று அரச தரப்பு வழக்கறிஞர் மேல்நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

விசாரணை நடைபெறும் என எதிர்பார்த்த மக்கள் நேற்று டில்லி மேல்நீதிமன்றத்தின் முன்னாள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன் இன்று இழுக்கப்பட்டதேசிய சுவீப்பில் முதல்மூன்று பரிசுகளும் பெறும் அதிர்ஷ்ட டிக்கட்டுகள் வருமாறு:

முதலாவது பரிசு
22 Z 0644
ரூ. 1,00,000

இரண்டாவது பரிசு
03 P 0686
ரூ. 40,000

மூன்றாவது பரிசு
42 J 0385
ரூ. 10.000

# வரி விளம்பரம்

### பயிற்சி

ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் பாலர் பாடசாலை ஆசிரியை பயிற்சி வகுப்பில் சேரவிரும்பும் மாணவிகள் இம்மாதம் முடிவதற்குள் சேரவும். விபரங்கட்கு: பாலர் கல்விக்கழகம் 77, அரசடி வீதி, இந்து மகளிர் கல்லூரிச்சந்தி, யாழ்ப்பாணம். 7325

### தேவை

வேப்பம்பழக்கோது தேவை. தொடர்பு கொள்ளுங்கள். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 7329

தீவுப்பகுதியிலுள்ள இந்து ஆலயத்தில் குடும்பமாக தங்கியிருந்து மாதாந்த வேதன அடிப்படையில் பூசை செய்வதற்கு அர்ச்சகர் தேவை. பரிசாதகர்களாகவும் கடமையாற்றக் கூடியவராகவும், குருப்பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசி ஒழுங்கு செய்யலாம். வீடு முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 7294 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7294

### காணவில்லை

சென்ற ஆவணி மாதம் 14-ம்திகதியிலிருந்து செ. நந்தகுமார் என்பவரைக் காணவில்லை. உயரம் 4 அடி. சிவப்பு நிறம். சுருண்ட தலைமயிர். வயது 16. அவர் நிற்கும் இடத்தை அறிந்தவர்கள் தயவு செய்து அறிவிக்கவும். த. செல்லத்துரை ஆசிரியன் நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 7317

### விற்பனைக்கு

விசுவமடுவில் வாழை வருமானத்துடனும் சிறந்த நீர்ப்பாசன வசதிகளுடனும் கூடிய மூன்று ஏக்கர் தோட்ட நிலம் விற்பனைக்குண்டு. விலை 40,000/- முகவரி: பொ. தவேந்திரன், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. 7316

EN 9000 தொடர்பிலக்கத்திலுள்ள கொன்சல் மார்க் II கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: திருமதி அருமைத்துரை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். 7315

தொண்டமனாற்றைச் சேர்ந்த கெருடாவில் என்ற இடத்தில் சுற்றுமதிலுடன் கூடிய ஒன்பது பரப்புக்காணியும் வீடும்விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: திருமதி ஆர். இராமச்சந்திரன், 47, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 7328

1 ஏக்கர் காணி கைதடியில் வயோதிபவிடுதிக்குப் பின்னால் பயிர்ச்செய்கைக்கும் கைத்தொழிலுக்கும் உகந்தது. பகுதியாகவும் வாங்கலாம். முகவரி: நா. சற்குணலிங்கன், படப்பிடிப்பாளர், 35, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 7327

நவீன வசதிகளுடன் சாவகச்சேரியில் வீடு, விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: நா. சற்குணலிங்கன், படப்பிடிப்பாளர், 35, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 7326

### தவறிவிட்டது

சென்ற ஒன்று திங்கட்கிழமை (3-ம் திகதி) ஆஸ்பத்திரிக்கும் சுன்டிக்குளிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் "கிலாஸ்ரோஸ்" சுன்னாகம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 7330

### பயிற்சிகள்

வெளி நாடுகளில் வேலைகளுக்கு ஏற்ற வெல்டிங், இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) பயிற்சிகள் இப்போது நடைபெறுகின்றன. விரைவில் City and Guilds (Electrical) மோட்டார் மெக்கானிசம் (Amimi) ஆரம்பமாகும். P. M. G. Certificate (General & Special) இம்மாதம் 14ம் திகதி ஆரம்பமாகிறது. உடன் பதிவு செய்யவும். வெளியூர் மாணவர்களுக்கு தங்கும் வசதிகளுண்டு. மைற் மண்டபம், 128, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். 7307

## இன்று ஸ்தாபகர்தினம்

## கந்தையா உபாத்தியாயரின் 'ஸ்கந்தா'

சிறு ஓலைக் கொட்டில் ஒன்றில் 1894-ஆம் ஆண்டு சைவப்பெரியார் கந்தையா உபாத்தியாயரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பாடசாலையே இன்று மக்கள் மனதில் உயர்ந்து நிற்பது மட்டுமல்லாமல் வானுயர்ந்த பல மாடிக்கட்டங்களை தன்னுடைமையாக்கி நிற்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இன்று ஸ்தாபகரின் 25-வது நினைவுநாளை ஸ்கந்தா பெருவிழாவாகக் கொண்டாடுகிறது.

கொழும்பில் 1894-ம் ஆண்டு இஸ்லாமிய கலாச்சாரங்களைப் பாதுகாக்க சஹிராக் கல்லூரியும் இந்துக்களின் பலம் வாய்ந்த ஸ்தாபனமான இராமகிருஷ்ணமிஷனும் ஸ்தாபிக்கப்பட்ட போது யாழ். குடாநாட்டில் கிறிஸ்தவ ஆதிக்கம் பலம்மிக்கதாக இருந்தது. சைவத்திலும் தமிழிலும் இருந்த பற்றினால் கந்தையா உபாத்தியாயர் மிகுந்த எதிர்ப்புக்களின் மத்தியில் ஸ்கந்தாவை ஸ்தாபித்தார். சுன்னாகம், கந்தரோடை மற்றும் அயல்கிராமங்களில் வாழும் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வுக்காக தன் வாழ்வை தியாகம் செய்த திரு. கந்தையா உபாத்தியாயர் ஸ்தாபித்த கல்லூரி வளர்ச்சி அடைந்ததற்கு அவருடன் உழைத்த சீனி உபாத்தியாயர், செல்லப்பா உபாத்தியாயர் ஆகிய இருவரினதும் ஒத்துழைப்பு எம்மால் மறக்க முடியாததாகும்.

தரப்படுத்தல் முறை அமுல் செய்யப்படமுன்பு, பல்கலைக்கழக விஞ்ஞானப் பகுதியில் எட்டிலொரு பகுதியினரும்கலை பகுதியில் இருபதிலொரு பகுதியினரும் ஸ்கந்தாவின் மாணவர்களாகவே இருந்தனர் என்பது ஸ்கந்தாவின் கல்வித்தரத்தை எடைபோட நல்லதொரு உதாரணமாகும். கல்வித்துறையைப் போலவேவிளையாட்டுத்துறையிலும் ஸ்கந்தா என்ற பெயர் நிலைபெற்றுவிட்டது. பல ஆண்டுகள் யாழ். மாவட்ட உதைபந்தாட்டச்சாம்பியனாக ஸ்கந்தா தெரிவு செய்யப்பட்டது ஸ்கந்தாவின் விளையாட்டுத்துறைச் சாதனைக்கு ஒரு 'கிறீன்லைற்'.

பெரியார் கந்தையா உபாத்தியாயர் எந்த விதமான எதிர்ப்புக்களையும் உண்மையாலும் சுயநம்பிக்கையாலும் தோற்கடிக்க முடியுமென எமக்குப் போதித்துள்ளார். அவரது கனவுகளை நினைவாக்க ஸ்கந்தாவுக்கு அதிகசந்தர்ப்பங்கள் கிட்டுவதாக.

--சபா. புஷ்பநாதன்

## அனுதாபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட இலங்கை வர்த்தகத் தொழிலாளர் சம்மேளனக் காரியதரிசி திரு. சி. பொ. வேலாயுதபிள்ளையின் பாரியாரான திருமதி. பாக்கியம் காலம் சென்றதையிட்டு யாழ்வர்த்தக கைத்தொழில் அதிபர்கள் தமது அனுதாபத்தைதெரிவித்துள்ளனர்.

## தேசிய அரசுப்பேரவை அரசமைப்பு திருத்தப் பிரேரணை

# சூடாக இல்லாவிட்டாலும் சுவையாக இருந்த விவாதம்

இரண்டாவது அரசியலமைப்புத் திருத்தம் தேசிய அரசுப் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இத்திருத்தம் மீதான விவாதம் பேரவையில் கடந்த 4ந் திகதி நடைபெற்றபோது சூடான விவாதத்தை அவதானிக்க முடியாவிட்டாலும் பல சுவையான சம்பவங்களை அவதானிக்கமுடிந்தது.

பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. இதுதான் சபையில் சுவையையும் ஏற்படுத்தியது.

திருத்தம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் இவ்விரு கட்சியினருமே சபையில் இருந்தார்கள்.

சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், எதிர்க் கட்சித் தலைவர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவிருப்பதாகத் தன்னிடம் தெரிவித்திருப்பதால் அவர் அந்த அறிக்கையை முதலில் சமர்ப்பிப்பார் என்று கூறியதும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், தாங்கள் இந்த விவாதத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லையென்றும் அதற்கான காரணங்களை இங்கு குறிப்பிட விரும்புவதாகவும் கூறித் தனது அறிக்கையை வாசித்தார்.

1972ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை விவகாரங்கள் முதலாகக் கடந்த பொதுத் தேர்தல் வரையிலான தங்களின் நிலைமைகள் சகலவற்றையும் விளக்கிக் கூறிய திரு. அமிர்தலிங்கம், ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்னை பற்றிக் குறிப்பிட்டிருந்தது. இப்போது இச்சபையின் 168 ஸ்தானங்களில் 140 ஆசனங்களையும் பெற்றுள்ளபோதும் தமிழர் பிரச்னை தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை யென்று சொன்னபோது, தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ குறுக்கிட்டு வ்வாதம் சம்பந்தமாகவே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார் என்றார்.

### ஒரு மாதத்தில்

ஆட்சிக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள்ளேயே நாட்டில் பல துன்பியல் சம்பவங்களைத் தமிழர்கள் கண்டார்கள். பலர் கொல்லப்பட்டார்கள்; காயமடைந்தார்கள். கற்பழிக்கப்பட்டார்கள். சொத்துடைமைகளை இழந்தார்கள். தமிழர்கள் உரிமையுடன் வாழ முடியாத நிலை இங்கு ஏற்பட்டிருக்கிறதென்றும் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து குறிப்பிட்டார்.

### மாலி

அப்போது சபாநாயகர், "நீங்கள் ஏன் விவாதத்தில் பங்குபற்றவில்லை என்றுதானே சொல்லப்போவதாகக் கூறினீர்கள். இப்போது வேறு பல விடயங்களைப் பற்றிப் பேசுகிறீர்களே" என்று சொன்னபோதும், நான் பங்குபற்றாததன் காரணத்தைத் தான் சொல்ல வருகிறேன். சுருக்கமாகவே கூறி முடிக்கிறேன் என்று கூறிய திரு. அமிர்தலிங்கம்—

திரு. ஜயவர்த்தன பிரதமராக ஆளப்போகிறாரா? அல்லது ஜனாதிபதியாக ஆளப் போகிறாரா என்பதில் தமிழ் மக்கள் எவ்வாறு அக்கறை கொள்ளமுடியும்? எங்கள் வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கையில் வீட்டு யன்னல் திரைச்சீலை பச்சையா, நீலமா என்று பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? என்றும் கேட்டார்.

தமிழ்மக்களின் விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளாவதாம், தமிழ் மக்கள் உயிர் வாழ்வதற்கே உரிமையற்ற நிலையில் இவ் விவாதத்தில் பங்குபற்ற விரும்பவில்லை என்று கூறிய அவர், நாம் எமது பொறுப்பிலிருந்து ஓட முடியவில்லை, தமிழ் மக்களின் விடுதலை என்ற அந்த புனிதமான எமது பொறுப்பை கடவுளின் கிருபையுடன் செய்து முடிப்போம் என்றும் கூறி தனது அறிக்கையை முடித்தார்.

### அத்தனகலை உறுப்பினர்

எதிர்க்கட்சித் தலைவரைத் தொடர்ந்து, அத்தனகலை உறுப்பினர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேச எழுந்தார் சபையில் அரசாங்க தரப்பு பின்வரிசைகளில் கூச்சல் எழுந்தது. திருமதி சிறிமாவோ தாம் பேச முடியாமலிருப்பதாக சபாநாயகரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து சபாநாயகர் அமைதியை நிலைநாட்டினார்.

அரசு அவசர அவசரமாக இத்திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்ற முயற்சிப்பதாகவும், இதனை விரிவாக ஆராய தமக்கு வாய்ப்பு அளிக்காதது சபையின் உரிமையை மீறும் செயல் என்றும் சர்வாதிகாரத்துக்கு வழி வகுக்கும்இத்திருத்தத்தை திரு. டட்லி சேனநாயக்கா முன்னர் எதிர்த்தார் என்றும் குறிப்பிட்ட திருமதி சிறிமாவோ தனது கட்சி சார்பிலான அறிக்கை ஒன்றை தமது பேச்சின் பகுதியாக பேரவைக் குறிப்பேட்டில் பதிவுசெய்யும் படியும் நேரதாமதத்தையிட்டு தான் அதை வாசிக்கவிரும்பவில்லை என்றும் சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

### உரிமைப் பிரச்னை

வர்த்தக அமைச்சர் திரு. லலித்அத்துலத் முதலி திருமதி பண்டாரநாயக்கா தமது அறிக்கையைசபையில் வாசிக்க வேண்டும் என்று உரிமைப் பிரச்னை ஒன்றைக் கிளப்பினார்.

இச் சமயம் சபையில் பெரும் கூச்சல் இடம்பெற்றது.

சபாநாயகர் குறிப்பிட்ட அறிக்கையின் பிரதிகள் எல்லா உறுப்பினர்களுக்கும் இடைத்தாலன்றி குறிப்பேட்டில் பதிவுசெய்ய சாத்தியமாகாது என்றார்.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, "எனக்கு இவை புரியவில்லை; எதிர்க் கட்சித் தலைவர் அறிக்கையொன்றை விடுத்துவிட்டு தான் விவாதத்தில் பங்குபற்றவில்லை என்றார். இப்போது அத்தனகலை உறுப்பினரும் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து அவரும் விவாதத்தில் கலந்துகொள்ளப் போவதில்லையா?" என்று கேட்டார்.

நீங்களும் அப்படித்தானே நடந்தீர்கள் என்று திரு. மைத்திரிபால சேனநாயக்கா சொன்னார்.

தமது நிலைமையை அந்த அறிக்கையில் தெளிவாகக்கூறியிருப்பதாக திருமதி சிறிமாவோ சொன்னார்.

இந்நிலையில் சபாநாயகர், அத்தனகலை உறுப்பினர் அறிக்கையை வாசிப்பின் அதனைப் பதிவுசெய்யலாம். அவரால் வாசிக்க முடியாவிடின் அவரது கட்சியைச் சார்ந்த வேறு எவராவது அதனை வாசிக்கலாம் என்றபோதும் சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது. பின்னர் திருமதி சிறிமாவோ அறிக்கையை சபையில் வாசித்தார்.

அவர் வாசிக்க ஆரம்பித்ததும் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவால் எழுதப்பட்டதை அத்தனகலை உறுப்பினர் வாசிப்பதாக பல குரல்கள் எழுந்தன.

திருமதி சிறிமாவோ 'பீலிக்ஸ் அதனை எழுதவில்லை, எமது கட்சிச் செயலாளர் திரு. சூரியாராச்சியே எழுதினார்' என்று சொன்னதும் மீண்டும் சபையில் சிரிப்பொலி எழுந்தது.

சபாநாயகர், அது அவர்களின் கட்சி அறிக்கையாதலால் அத்தனகலை உறுப்பினர் அதனை இங்கு வாசிக்கலாம் என்றதும் திருமதி பண்டாரநாயக்கா அறிக்கையை தொடர்ந்து வாசித்தார்.

சபை முதல்வர் திரு. ஆர். பிரேமதாசா ஒரு ஒழுங்குப்பிரச்னையைக் கிளப்பினார்.

அத்தனகலை உறுப்பினர் இங்கு வாசிக்கும் அறிக்கை ஏற்கனவே கடந்த 28-ம் திகதி 'வீக் என்ட்' பத்திரிகையில் 4-ம் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. ஆனால் அத்தனகலை உறுப்பினரின் பெயரிலல்ல, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் பெயரில் அதுதான் ஒருமாற்றம். இரு

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருகோணமலை இந்துக்கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியும், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியும் மகாஜனக் கல்லூரி மைதானத்தில்இன்று சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்கின்றன.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அமைச்சூர் விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் விளையாட்டுக் கழகங்களிடையே, நடாத்தப்படும் வருடாந்த மெய்வல்லுநர்விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## நாளை ஆராய்வர்

யாழ்ப்பாணம், வெள்ளி

பாலர் கல்விக்கழகத்தின் பொதுக்கூட்டம் யாழ். இந்து மகளிர்கல்லூரிச்சந்தியில் கழகக் காரியாலயத்தில் நாளை நடைபெறவிருக்கிறது.

அரசாங்கம் ஐந்து வயதுள்ள மாணவர்களை அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி போதித்து வந்துள்ள ஆசிரியைகளுக்கு எழுந்துள்ள பிரச்னைகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட விருப்பதாகத் தெரிகிறது.

# இந்திரா மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபடுவாராம்

## மக்கள் மத்தியில் அவரே கூறினர்

புதுடில்லி, அக். 6

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா தாம் மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைதாகிவிடுதலை செய்யப்பட்ட பின்னர் குஜராத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஆட்சிபீடத்தில் இருக்கும் ஜனதாகட்சி உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் தவறான கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகிறது.

அரசின் கொள்கை தொடர்பாக மத்திய அமைச்சர்கள் முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளை விடுக்கின்றனர். இந்நிலையில் நான் தீவிர அரசியலில் ஈடுபடுவதைவிட வேறு வழி இல்லை. (இ)



இந்திரா கைது விவகாரம்:

# அமைச்சரவையில் கருத்து வேறுபாடா?

## ராஜ்நாராயண் மறுப்பு

புதுடில்லி, அக். 6

திருமதி இந்திரா காந்தி கைது செய்யப்பட்டது தொடர்பாக இந்திய மத்திய மந்திரிகளுக்கிடையே கருத்து வேறுபாடு எதுவும் கிடையாதென்று மத்திய சுகாதார அமைச்சர் திரு. ராஜ் நாராயண் தெரிவித்தார்.

திருமதி காந்தி கைதுசெய்யப்பட்டது தொடர்பாக மந்திரிசபையில் கருத்து வேறுபாடு இருக்கிறதென்று நாட்டில் நிலவிவரும் கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமமந்திரி திரு. மொரார்ஜீ தேசாய், உள்துறை மந்திரி திரு. சரண்சிங், சட்ட மந்திரி திரு சாந்திபூஷண் ஆகியோருடன் ஆலோசனை நடத்திய பின்னரே திருமதி இந்திரா காந்தி கைதுசெய்யப்பட்டாள் என்றும் திரு. நாராயண் தெரிவித்தார். (இ)

# காங்கிரஸ் - ஜனதா

## ஆதரவாளர் மோதல்

### பொலிசார் கண்ணீர்ப் பிரயோகம்

மதுரை. அக். 6

இந்திரா கைது விவகாரம் தொடர்பாக மதுரை ஜனதா கட்சி அலுவலகத்திற்கு முன்னிலையில் ஜனதா-காங்கிரஸ் ஆதரவாளர்கள் மோதலில் ஈடுபட்டதை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகஞ் செய்தனர்.

இரு கட்சி ஆதரவாளர்களும் தம்மிடையே சோடா, அசிட் போத்தல்களினாலும், கற்களினாலும் தாக்குதல் நடத்தினரென்றும் இதனால் 12 பேர் காயமடைந்தனரென்றும் அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்துப் பஸ்கள் மீது கல் வீசப்பட்டு, பஸ்கள் சேதமடைந்தமையால் நேற்றுப் பகலுக்குப் பின் நகர பஸ் சேவைகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டிருந்தன. (இ)

# பழிவாங்கும் நோக்குடன் இந்திரா கைதாகவில்லை

## ஆச்சார்யா கிருபளானி கருத்து

சென்னை, அக்.9

திருமதி இந்திராகாந்தியைக் கைதுசெய்தது அவர் மீது வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையோ அன்றி அவசரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையோ அல்ல என்று ஆர்சாரியா கிருபளானி தெரிவித்துள்ளார்.

சென்னையில் அவர் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

திருமதி காந்தி மீது ஜனதா அரசு பழிவாங்கவிரும்பியிருந்தால் பதவிக்கு வந்த உடனேயே அவரைக் கைது செய்திருக்கும்.

திருமதி இந்திரா மீது நடவடிக்கை எடுப்பதை அரசு தாமதமாக்கி வருகிறது என்றும் அதைத் துரிதப்படுத்தும்படியும் நாங்கள் மக்கள் சார்பில் உள்துறை அமைச்சருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தேன். அத்துடன் அதிகாரிகள், அறிஞர்கள் உட்பட பல பொதுமக்களும் இது பற்றி அரசிடம் வலியுத்தி வந்தனர்.

திருமதி காந்தியின் ஆட்சியில் நெருக்கடி நிலை அமுலிலிருந்தபோது இடம்பெற்ற கட்டுமீறிய செயல்களுக்கு திருவாளர்கள் வை பீ. சவானும் பிரமானந்த ரெட்டியும் மன்னிப்புக்கேட்டுள்ள போதிலும் திருமதி காந்தி அதற்கு நியாயம் கூறிவந்தார். [இ]

# தி. மு. க.— அ.இ.அ.தி.மு.க. இணைப்புக்கு கருணாநிதி எம். ஜி. ஆரிடம் தூதனுப்பினரா?

## மனோகரன் கூற்றுக்கு கலைஞர் மறுப்பு

சென்னை, அக். 6

"திராவிட முன்னேற்றக் கழகத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்துடன் இணைப்பதற்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனிடம் திரு. கருணாநிதி தூதனுப்பினர் என்றும் அதற்கு அத்தாட்சியாக 'ஒலிப்பதிவு நாடாக்களை தாம் வைத்திருப்பதாகவும் திரு. நாஞ்சில் மனோகரன் கூறினர். அந்த விவகாரத்தில் எதுவித உண்மையுமில்லை. திரு. கருணாநிதி இவ்வாறு திரு. நாஞ்சில் மனோகரனின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.



சென்னையில் இருந்து வெளிவரும் தி மு. க. வின் நாளிதழான 'முரசொலி'யில் உடன் பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் திரு. கருணாநிதி மேலும் கூறியதாவது:-

"தி. மு. க. வின் ஊழல் பற்றிய பல ஆதார பூர்வமான கோப்புக்கள் எங்களிடம் உண்டு அதனை முதலமைச்சர் முன்னிலையில் கருணாநிதிக்கு காட்டப்போகின்றோம் என்றார். திரு. நாஞ்சில் மனோகரன். ஆகட்டும். நேரம் திகதி கூறுங்கள் சந்திப்போம். எனச் சிதம்பரம் கூட்டத்தில் வைத்து நான் கேட்டேன். அதன் பிறகு ஒருமாதமாக எவ்விதமான பதிலும் கூறாது இருந்தார் நாஞ்சில்.

மீளவும் கருணாநிதி தி. மு. க. வை அண்ணா தி. மு. க. வுடன் இணைப்பதற்கு தூதனுப்பினர். எனத் திடீரெனப் புலம்பினர் நண்பர் நாஞ்சில்.

அது மட்டுமல்லாமல் இந்த தூதுக்குச்சாட்சியாக 'டேப்'புகள் இருப்பதாக கூறியும் உள்ளார். அந்த டேப்புகளை சபாநாயகரின் அறையில் சர்வகட்சித் தலைவர்களுக்கும்போட்டுக் காட்டுங்கள் என்று கேட்டேன். அதற்கு கண்ணப்பத்திடலில் போட்டுக் காட்டப்போவதாக நாஞ்சில் கூறியுள்ளார். அதற்கும் நான்தயார். இந்த 'கோப்பு-டேப்பு-டுப்புக்களை' கண்ணப்பத்திடலிலும் அவரால் காட்டமுடியாது என்பதை நான் அறிவேன். ஏனெனில் இதில் எவ்விதமான உண்மையும் இல்லை.

### என்னைக்கைதுசெய்ய பச்சைக்கொடியாம்

இது ஒருபுறமிருக்க என்னைக் கைதுசெய்யப் போவதாகவும் அதற்கு திரு. மொரார்ஜீ தேசாய் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகவும் இப்போது புதியகதையொன்றைத் தொடங்கியுள்ளார்கள்

பிரதமர் திருவனந்தபுரத்தில் வைத்து என்னைக் கைதுசெய்ய பச்சைக் கொடி காட்டியதாக அங்கு இருக்கும் அய்யங்கார் சுவாமி செப்டெம்பர் 22-ம் திகதி அறிக்கை விடுத்தார். ஆனல் பிரதமர் 22-ம் திகதியே திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்டிருந்தார்.

இப்படியான சில சுவாமிகளால் தான் காலஞ்சென்ற பெரியார் சிலருக்கு உடம்

(5-ம் பக்கம்பார்க்க)

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்த 80 ஆயிரம்பவுண்

லண்டன்,அக்.6

லண்டனில் இவ்வருடம் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக 80 ஆயிரம் பவுண் ஸ்டேர்லிங் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் லண்டனில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும் இவ்வருடம் மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஸ்கொட்லண்ட்யாட் பொலிசார் தெரிவித்தனர். (ரா)

∵ உறுதியானதும்
∵ நீடித்து உழைப்பதும்
∵ தன்னிகரற்றதுமான
வைத்திலிங்கம்ஸ்
இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை
நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு,
கொழும்பு - 12
தொலைபேசி: 33143 — 4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

ஜாப். விமானக் கடத்தல் விவகாரம்:

# பிரதமர் குக்குடாவை செஞ்சேனை பழிவாங்குமாம்

லண்டன், அக். 6

ஜப்பானியப் பிரதமர் திரு. குக்குடாவைப் பழிவாங்கப் போவதாக ஜப்பானிய செஞ்சேனைப் படையினர் தெரிவித்துள்ளனர்.

லண்டனில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் செஞ்சேனைப் படையைச் சேர்ந்த தலைவர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜப்பானிய விமானக் கடத்தல்காரரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு ஜப்பானிய அரசு அல்ஜீயர்ஸிடம் கேட்டுக்கொண்டதை அடுத்தே செஞ்சேனைப் படையினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இதே வேளையில் அல்ஜீயர்ஸில் இருக்கும் விமானக்கடத்தல்காரரிடம் ஜப்பானிய அரசினுல் கொடுக்கப்பட்ட 60 லட்சம் டாலர் பணயப்பணம் தற்போது அவர்களிடம் இலலை யென்று அல்ஜீயர்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளையில் கடத்தல்காரரையும், பணயப் பணத்தையும் ஒப்படைக்காவிடின் அவர்களை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கவேண்டாமென்று ஜப்பானிய அரசு அல் ஜீயர்ஸிடம் கேட்டுள்ளது. (இ)

ஜனாதிபதி சர்வாதிகாரியா?

# மக்கள் சிந்தனை சக்தியை அவமதிக்கும் செயல்!

## சுதந்திரக் கட்சியினருக்கு பிரேமதாஸ சாட்டை

கொழும்பு, வியா

அரசியல் சட்டத்தில் கொண்டுவரப்படும் திருத்தம், ஜனாதிபதி என்ற பெயரில் சர்வாதிகாரி ஒருவரை உருவாக்கும் நடவடிக்கையென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் குற்றஞ்சாட்டுவது மக்களின் சிந்தனைசக்தியை அவமதிப்பதாகும் என்று பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சரும், சபைமுதல்வருமான திரு. ஆர். பிரேமதாசா கூறினார். அரசியல் சட்டதிருத்தப் பிரேரணை மீது தேசிய அரசுப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு திரு. பிரேமதாசா உரைநிகழ்த்தினார்.

70ம் ஆண்டில் புதிய அரசியல் திட்டம் உருவாக்கப்படும் என்று கூறி மக்களின் முன் சென்ற நீங்கள் பதவிக்கு வந்ததும் பதவிக்காலத்தை 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டுகளாகநீடித்துக் கொண்டீர்கள். இதற்கு மக்கள் அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. இது சர்வாதிகார நடவடிக்கையல்லவா என்று அவர் கேட்டார்.

அரசியல் சட்டம் சபையில் விவாதிக்கப்பட்டபோது ஐ. தே. கட்சியினரான நாங்கள் 17 பேர் சபையில் கலந்து கொண்டோம். ஆனால் ஆட்சிக் காலத்தை 7 வருடங்களாக நீடித்ததை ஆட்சேபித்து சபையிலிருந்து வெளியேறினோம். காலஞ்சென்ற பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இவ்வாறான மாற்றத்தை விரும்பவில்லை என்று இங்கு கூறப்பட்டது. அன்று இந்தச் சபையில் அவர் தமது கருத்துக்களை எடுத்துக் கூறவும் விடாமல்இடைஞ்சல் செய்தவர்கள் இன்று அவரையே மேற்கோள் காட்டமுனைவது விந்தையாகவிருக்கிறது என்றார் அமைச்சர்.

பொதுத்தேர்தல் நடத்தாமல் இருப்பதற்கும் முயற்சி செய்தார்கள். அது சர்வாதிகாரப் போக்கு அல்லவா? முக்கியமான விவாதம் ஒன்று இருந்த வேளையில் திடீரென்ச் சபையின் கூட்டத்தொடரை ஒத்திவைத்தார்கள். இது சர்வாதிகாரப்போக்கு அல்லவா? மக்களை விசாரணையின்றி காவலில் அடைத்துவைத்தார்கள். சித்திரவதை செய்தார்கள். சுட்டுக்கொன்றார்கள். இதெல்லாம் சர்வாதிகாரமில்லாமல் வேறு என்ன? இதையெல்லாம் மறந்துவிட்டு இன்று அத்தனகலை உறுப்பினர் எம்மைப் பார்த்து சர்வாதிகாரத்துக்கு வழி சமைப்பதாகக் கூறுகிறார் என்றார் திரு. பிரேமதாசா.

திருத்தப் பிரேரணை கஸட் செய்யப்படவில்லையென்று கூறுகிறார்கள். அவசரஅவசரமாக சட்ட வியாக்கியான சட்ட நகலை இவர்கள் 'கஸட்' செய்யாமல் கொண்டுவந்ததை மறந்துவிட்டார்களா?

71-ம் ஆண்டு அத்தனகலை உறுப்பினர் மிகவும் கருணையுடன் நடந்து கொண்டதாகக் கூறப்பட்டது. சமீபத்திய கலவரங்களை அடக்குவதற்கு அவசரகாலச்சட்டம் பிரகடனப் படுத்தப் படவேண்டுமென்று எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தார்கள். இருக்கும் சட்டங்களைக் கொண்டே கலவரங்களை அடக்குவோம் என்று பிரதமர் உறுதியாகக் கூறினார். நாங்கள் செய்ததையே நீங்களும் செய்கிறீர்கள் என்று அவர்களால் கூறமுடியாமல் போய்விட்டது. அவசரகால நிலைமை இன்றியே கலவரங்களை அடக்கினோம். இதுவா சர்வாதிகாரம்?

'அத்தனகலை தொகுதிஉறுப்பினர் இங்கே சிங்களத்தில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசினார். சர்வாதிகாரத்தைப்பற்றி இவரா பேசுகிறார் என்று மக்கள் சிரிப்பார்கள்என்றுபயந்து யாரோ எங்கிருந்தோ எழுதிக் கொடுத்ததை இங்கு கொண்டு வந்து வாசித்தார்' என்று கூறினார் அவர்.

'அத்தனகலைத் தொகுதியில் ஒருபகுதிமக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் இந்த நாட்டின் அதிகாரமிக்கபிரதம மந்திரியாக வந்து ஆட்சிநடத்தினார் என்றால், நாட்டின்சகல மக்களாலும் தெரிவு செய்யப் படவிருக்கும் ஜனாதிபதி அவ்வாறு அதிகாரங்களைப் பெற்று ஏன் ஆட்சி நடத்தக்கூடாது? எது சர்வாதிகாரம்?

இந்த நாட்டில் 90 சதவிதமானவர்கள் தரித்திர நிலையில் வாழ்கிறார்கள். 12லட்சம்பேர் வேலையின்றியிருக்கிறார்கள். இந்த நாட்டில் எந்த ஒருவரும் எதுவும் செய்ய முடியாமல் நாடே ஒரு சிறைச்சாலையாக் கப்பட்டிருந்தது. எல்லாவற்றையும் அரசாங்கமே தன் பொறுப்பில்எடுத்துக்கொண்டு நடத்தினார்கள். இந்த முறையை உடைத்தெறியவே நாம் முயல்கிறோம். சாதாரண கொட்டிலில் வாழ்பவனும் சரி வசதிபடைத்தவனாக இருந்தாலும் சரி எல்லா மனிதனும் அரசாங்கத்தில் பங்கு ஏற்கும் ஒரு முறையை நாம் கொண்டு வருகிறோம் என்றார் அமைச்சர்.

அரசியல் சட்டத்தில் என்ன என்ன மாற்றங்களைக்கொண்டு வரவேண்டுமென்பது பற்றிய முழுவிபரங்களையும் ஆராய ஒரு குழு நியமிக்கப்படவிருப்பதாகவும் அவர் சொன்னார். இந்தத் திருத்தத்தின் பின்னர் இப்போதைய பிரதமமந்திரி ஜனாதிபதியாவார். அதன்பின் மாவட்ட அமைச்சர் நியமிக்கப்பட்டு, சகல மாவட்டங்களிலும் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

அதிகாரம் ஒரு சிலரின் கையில் குவிந்து கிடக்காமல் தேசியமட்டத்திலும் மாவட்ட மந்திரிகள், உள்ளூராட்சி மன்றங்கள் மட்டத்திலும் மக்கள் தம் அதிகாரங்களைப் பிரயோகிக்கும் ஒருமுறையை உருவாக்குவோம் என்றார்.

பொதுமக்களுக்குத் திருப்தியளிக்கும் ஒரு ஆட்சியை நிலைநாட்டுவோம். 10 லட்சம் பேருக்கு தொகுதிகள் அடிப்படையில் வேலைவாய்ப்புவழங்குவதற்கு திட்டம் ஒன்று தீட்டப்படுவதாகவும் மந்திரி கூறினார்.

அகதிகள் புனர்வாழ்வு:

# ஊற்றுநிறுவன முயற்சிக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊற்று நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்திற்குப் பொதுமக்களிடமிருந்து நல்ல முறையில் ஆதரவு கிடைத்து வருவதாகத் தெரிகின்றது.

பல பாடசாலை ஆசிரியர்களும், வேறு நிறுவனங்களும் இதற்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளனர். அண்மையில் ஊற்று நிறுவனம் ஆரம்பித்த சீட்டு விற்பனையை மில்க்வைற் நிறுவன அதிபரும், அப்துல் அலி முகமதலி நிறுவன அதிபரும் நிதியளித்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிதிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் முதற் கட்டமாகச் சுமார் 279 ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கிறார்களென்றும் மேற்கொண்டும் நிதி உதவ இவர்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் ஊற்று நிறுவனப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா 85894-17 சதம் கிடைத்துள்ளது. இந்நிதிக்கு பணம் செலுத்த விரும்புகிறவர்கள் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை கணக்கு இல. 3840/-க்கு நேராகச் செலுத்தலாம் அல்லது பொருளாளர்களான யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் திரு. லங்கா நேசையா அல்லது சீமாஸ் இன்டஸ்ரீஸ் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். ஜே. குணரத்தினமிடமும் செலுத்தலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி | ரூபா 73526-27 |
| இ. போ. ச. கோண்டாவில் சாலை ஊழியர்கள் | 7522-00 |
| வளலாய் பாரதி சனசமூக நிலையம் | 1250-00 |
| சுன்னாகம் விற்பனைத் திணைக்கள ஊழியர்கள் | 100-00 |
| கே. சுப்பிரமணியம், ஜே. பி., அராலி | 50-00 |
| நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றம் | 137-00 |
| சர்வோதய சனசமூக நிலையம், ஆவரங்கால் | 490-90 |
| புனித பேதுருவானவர் இளைஞர் மன்றம், மண்டைதீவு | 150-00 |
| வாதரவத்தை கிராம பொது மக்கள், புத்தூர் | 153-00 |
| நுணுவில்கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை | 125-00 |
| கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை | 131-00 |
| சமுத்ரா ரேட்ஸ், யாழ்ப்பாணம் | 50-00 |
| எஸ். செபஸ்தியாம்பிள்ளை, யாழ்ப்பாணம் | 25-00 |
| என். கதிர்காமதாஸ், சுன்னாகம் | 15-00 |
| கலாநிதி டபிள்யு. எல். ஜெயசிங்கம், யாழ்ப்பாணம் | 100-00 |
| விக்ரர் அன் சன்ஸ், யாழ்ப்பாணம் | 101-00 |
| கலாநிதி வி. ரி. பசுபதி, யாழ்ப்பாணம் | 100-00 |
| கலாநிதி எஸ். வரதராசா, குருநாகலை | 100-00 |
| கொல்லங்கலட்டி கிராம பொதுமக்கள், தெல்லிப்பளை | 1303-00 |
| வேலணை ப. நோ. கூ. ச. ஊழியர்கள் | 380-00 |
| வண. ஜே. ஜே. ஞானப்பிரகாசம், சுண்டிக்குளி ஊடாக | 35-00 |
| வண. ஜே. ஏ. சர்வானந்தன், நல்லூர் ஊடாக | 50-00 |
| மொத்தம் | 85,894-17 |



# பன்சிலால், 75 தொழில் அதிபர்கள் வீடுகளில் பொலிசார் சோதனை

## ஊழல் தொடர்பான முக்கிய தஸ்தாவேஜுகள் மீட்பு

புதுடில்லி, அக். 6

டில்லியிலும், ஹரியானாவிலும் உள்ள முன்னாள் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. பன்சிலாலின் இல்லங்களில் நேற்றுப் பொலிஸசர் சோதனையிட்டுப் பல முக்கிய தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றினர்.

திரு. பன்சிலாலுக்கு எதிராக வெவ்வேறு நீதிமன்றங்களில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே இந்தச் சோதனைகள் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

திரு. பன்சிலாலின் சட்ட விரோதச் செயலுக்கு உடந்தையாக இருந்த 75 தொழில் அதிபர்களின் வீடுகளிலும் சோதனை நடத்திய பொலிஸார் பல முக்கிய தஸ்தாவேஜுகளைக் கண்டுபிடித்தனர். (இ)

ஆசிரியருக்குக்கடிதம்:

## விசாரணைக் குழு வேண்டும்!

இலங்கைப் பல்கலைக் கழகச் சகல வளாகங்களும் 17-ம் திகதி திறக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்ட இவ்வேளையில் யாழ்ப்பாணத்தில் கல்வியின்ற சிங்கள மாணவர்கள் திரும்பவும் யாழ்ப்பாண வளாகத்திற்கு வராமல் கொழும்புபேராதனை வளாகங்கட்கு மாற்றப்பட இருக்கிறார்கள் அதேசமயம் யாழ்ப்பாண வளாகத்திற்கு கலை, விஞ்ஞான தமிழ்மாணவர்கள் விரும்பியவர்கள் கொழும்பு—பேராதன் வளாகங்களிலிருந்து மாற வாய்ப்பளிப்பதாகவும் கூறப்படுகிறது. ஏனைய வளாக மாணவர்கள் பொறியியல், மருத்துவத்துறை மாணவர்கள் அனைவரும் மீண்டும் முன்னைய வளாகங்கட்கே செல்லவேண்டியுள்ளது.

யாழ்.வளாகச் சிங்களமாணவர்கள் தமக்கு யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்கள் தமது உடமைகளை அபகரித்ததாகவும், துன்புறுத்தியதாகவும் மீண்டும் அங்குசெல்லத்தாம் அனைவரும் விரும்பவில்லை என்றும் பாரதூரமான ஓர் அறிக்கையைப் பிரதமரிடமும் சிங்கள தேசியப் பேரவை உறுப்பினர்களிடமும் கையளித்துள்ள இந்த அறிக்கை எவ்வளவு தூரம் உண்மையானது என்று ஓர் விசாரணையுமில்லாமல் சிங்கள மாணவர்கள் கொழும்பு, பேராதனை வளாகங்கட்கு மாற்ற இருப்பதால் — யாழ் வளாகத்தில் சிங்கள மாணவர்கள் தாக்கப்பட்டார்கள் என்பதை வலியுத்துவதாக அமைகிறது. இதே நிலையில் யாழ் வளாகச் சிங்கள மாணவர்கள் இருக்கும் அதே வளாகங்கட்குத் தமிழ் மாணவர்கள் செல்லுல் எவ்விதம் பாதுகாப்பாக இது அமையும் என்று சந்தேகம் எழுகிறது. எனவேதான் 17-ம் திகதிக்கு முன்னர் உடனடியாக ஓர் விசாரணைக்குழு நியமித்து யாழ். வளாகப் பிரச்சனைகளை ஆராய்ந்து "சிங்கள மாணவர்கள் யாழ் வளாகத்தில் தாக்குப்படவில்லை" என்ற உண்மையை நாட்டு மக்களுக்குப் பிரதமர் எடுத்துக்கூறவேண்டும். 17ம் திகதி ஆரம்பமாகும் வளாகங்கள் மீண்டும் ஒரு இனப்பிரச்னைக்கு வித்திடாமலிருக்க ஆவனசெய்ய வளாகங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும்.

தமிழ் மாணவர்கள் ஏற்படுத்திய சர்வவளாகக் குழுவைச் சந்தித்து, அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்வதுடன் 17ம் திகதி வளாகங்கள் திறக்கப்படுமுன் விசாரணைக்குழு நியமித்து அறிக்கைவிடுவது சகல வளாக மாணவர்க்கும், அவர்தம் பெற்றோர்க்கும் மனஆறுதலைக்கொடுக்கும் என்று நம்புகிறோம்.

இப்படிக்கு

(இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கொழும்பு ஆயுர்வேத மருத்துவநிறுவகத்தின் பாதிக்கப்பட்டவர்களின் சங்கச் செயலாளர்)

இ. இராசரத்தினம்

## 3 நாடகங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆவரங்கால் பர்வதபத்தினி அம்மன் ஆலய புனருத்தாரணத்தை யொட்டி ஆவரங்கால் சனசமூகநிலைய முன்றலில் அரிச்சந்திரமயானகாண்டம், 'வள்ளி திருமணம்', 'நல்ல முடிவு' ஆகிய நாடகங்கள் இன்றிரவு நடைபெறவிருக்கின்றன.

## தி. மு. க.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெல்லாம் விஷம் என்று கூறினார். இந்த திருவனந்தபுரத்து அய்யங்காரி சுவாமிக்கு கருணாநிதியை கைதுசெய்வதில் அவ்வளவு அக்கறை.

இது ஒருபுறமிருக்க அண்ணா தி. மு. க. அமைச்சர்கள் செப்டெம்பர் 9-ம் திகதியே என்னைக் கைதுசெய்யப் போவதாக கூறினர். ஆனால் இப்போது பிரதமர் கூறியதையே தாம் கூறுவதாக சாக்குப் போக்கு சொல்லுகின்றனர்.

கைவிலங்கிடுதல்- ஜீப்பில் ஏற்றுதல்- ஜீப் வண்டியில் ஊர்வலம் போகவிடுதல்- இவைதான் இந்திரா அரசின் செயல்கள். அதையே எம். ஜி. ஆர். அரசும் தாராளமாகச் செய்யட்டும்.

ஆனால் மொரார்ஜி பச்சைக் கொடி காட்டினார். கருணாநிதியைக் கைதுசெய்யவெனக் கூறுபவர்கள், மக்கள் சிவப்புக் கொடி காட்டுவார்கள் என்பதை மறக்கவேண்டாம். மக்களின் சிவப்புக் கொடியை அவர்கள் சந்திக்கவேண்டிவருமென்பதை மறக்கவேண்டாம். (கி-இ)


மனோஹரா (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ் சுறிமுகம் பவானி நடித்த
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—ஜெயபிரபா —அசோகன்
துணிவே துணை

லிடோ (யாழ்.நகர்) போன்; 7693
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
வைராக்கியம்
அடுத்த வெளியீடு நீதிக்கு தலை வணங்கு

RIO (Jaffna)
Daily 10-30, a.m. 4-45, 7-00, 9-30 p.m.
OPERATION CROSS EAGLEs
(war Film)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-00 p.m. only
'SEXY SUSAN KNOWSHOW'
(Adults only Color)
From 10-10-77
The Great Barrier Reef

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45 10-00
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
பூம்புகார்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
சிவாஜி ஜமுனா
மருதநாட்டு வீரன்

ராஜா - யாழ்நகர்
இன்று வெள்ளி முதல்
தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்
கே. ஆர். விஜயா
மேஜர் சுந்தரராஜன்
எம். ஆர். ராதா
சீர்காழி கோவிந்தராஜன்
சௌகார் ஜானகி
ஜெயசித்திரா
கதை-வசனம் - டைரக்ஷன் (இயக்குநர் திலகம்) கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
தசாவதாரம்
வண்ண ஓவியம்

சாந்தி யாழ். நகர் போன்; 7642
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அளிக்கும்
எங்கள் தங்க ராஜா (புதிய பிரதி)
(வர்ணப்படம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

### மணிவாக்கு

எங்களுக்கு எங்கள் பிழைகளைக் காண விருப்பமில்லை. ஆனால் மற்றவர்களிற் பிழை காண்பதில் மகிழ்கிறோம் இப்பழக்கத்தால் அதிகம் துன்பம் உண்டாகிறது.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## தொண்டமானின் உரை

அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தப் பிரேரணையின் மீது நடந்த விவாதத்தில் திரு. எஸ். தொண்டமான் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியிருப்பதுடன் அதற்குச் சாதகமாக வாக்களித்துமிருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் யாவரும் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளாமல் சபையைவிட்டு வெளியேறியிருக்க அதன் தலைவரான திரு. தொண்டமான் மாத்திரம் விவாதத்தில் கலந்து கொண்டதுடன் வாக்களித்துமிருப்பது அரசியல் வட்டாரங்களில் வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பி விட்டிருக்கின்றது. இதன் தாற்பரியம் பற்றி இப்பொழுது இங்கு ஆராய்வது நமது நோக்கமல்ல. ஆனால் திரு. தொண்டமான் எந்த மக்களின்சார்பில் பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டாரோ அந்த மக்களின் நலன் குறித்து அவர் இந்த விவாதத்திலெடுத்துவைத்த சில கருத்துக்கள் சிந்தனைக்குரியவை.

டொனமூர் திட்டத்தின் கீழ் ஏழு அல்லது எட்டுப் பேர்வரையில்சட்டசபைக்கு உறுப்பினர்களாக எமதுமக்களால் தெரிவு செய்யப்படக்கூடிய நிலைமை இருந்தது. ஒருவர் அமைச்சராகப் பதவி வகிக்கவும் முடிந்தது.

பின்னர் வந்த சோல்பரித் திட்டத்தின் கீழ் அமைச்சர் அவைக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டதால், எமது இனத்தவர்கள் திடுதிப்பென அரசியல் அனாதைகளாக்கப்பட்டு விட்டனர். இப்பொழுதுஇருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் ஒரே ஒரு உறுப்பினர்- அதுவும் மூன்றாவது உறுப்பினராகத் தெரிவாகும் நிலைதான் ஏற்பட்டுள்ளது என்று விளக்கிய திரு. தொண்டமான், இதுவரைகாலமும் பலவகையிலும் நாம் பாதிக்கப்பட்டு விட்டோம்; அரசியல் சட்டத்திலறு மாற்றம் செய்யப்பட்டாலும் அதனால் எமது மக்களுக்கு ஏதாகிலும் நன்மை விளையாதா என்று எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொகுதி அடிப்படையிலும், மாவட்ட அடிப்படையிலும் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கப்போவதாகக் கூறுகிறீர்கள் என்று குறிப்பிட்ட திரு தொண்டமான், 'மக்கள்' என்ற சொல் இந்திய வம்சாவளியினரை உள்ளடக்குவதில்லையென்ற விசித்திரநிலையையும் எடுத்துக்காட்டினார் உழைப்பைப் பெற்றுக்கொள்ளும் வரையில் தான் அவர்கள் 'மக்கள்'. அவர்களுக்கு ஏதும் நன்மைசெய்யவேண்டியேற்பட்டால் அர்த்தம் மாறி விடுகின்றது. ஒரு பேரவை உறுப்பினர், அல்லது அமைச்சர் இந்த மக்களுக்காக ஏதும் நன்மை செய்ய முன் வந்தால் உடனே, தமிழர்களுக்குஉதவுகிறார்கள்என்ற கோஷம் எழுப்பப்பட்டுவிடுகின்றது. இந்த நிலைமையில் மலையகம் எங்கும் பரந்து வாழும் இந்திய வம்சாவளியினரான 10 லட்சம் மக்களின் நலன்களைப் பேணுவதற்கு என்ன வழி செய்யப் போகிறீர்கள் என்று திரு. தொண்டமான் கேட்டார்.

மலையகத் தமிழ்மக்களின் பிரச்னைகளும், தேவைகளும் வாழ்க்கைச் சூழ்நிலைகளும் நாட்டின் ஏனைய சமூகத்தவர்களிலிருந்து பெரிதும் வேறுபட்டவையாகும். அவர்களில் பெரும்பாலானவர்களின் பிரஜாவுரிமை அந்தஸ்து இன்னமும்நிர்ணயிக்கப்படாமலே இருந்து வருகின்றன. அடுத்தடுத்து பதவிக்குவந்த எல்லா அரசுகளுமே இவர்களைஓரவஞ்சகமாகவே நடத்திவந்துள்ளன. எனவேஇந்தச்சந்தர்ப்பத்திலாகிலும் இவர்களின் பிரச்னைகளை உரியமுறையில் மனிதாபிமானத்துடன் அணுகி தீர்த்துவைக்க ஒரு மார்க்கத்தைக்கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். அதன்மூலம் தொடர்ந்தும் அவர்கள் பின்தங்கியநிலையிலேயே இருக்காமல், நாட்டின் அபிவிருத்தியில் ஏனைய மக்களுடன் சமமாகப் பங்கேற்றுக் கொள்ளவும், சௌஜன்யமாக வாழவும் வழி பிறக்கும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் கொரபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.

### மகரகமாவில்

# யாழ். நோயாளர் துன்புறவில்லை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். லயன்ஸ் கழகமும், மகரகம லயன்ஸ் கழகமும் கூட்டாக எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக, யாழ். மாவட்டத்தில் உள்ள புற்று நோயாளர்கள் மகரகமவில் உள்ள புற்றுநோயாளர்கள் ஆஸ்பத்திரியில் நேரடி கண்காணிப்பின்கீழ் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சென்றவாரம் 10 பேர் கொண்ட புற்றுநோயாளர்கள், கொழும்பு சென்று மகரகம லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் சிகிச்சை பெற்றனர். இவர்களில் சிலர் றேடியம் சிகிச்சையளிப்பதற்கு திகதி கொடுக்கப்பட்டும் சிலருக்கு யாழ். வைத்தியசாலையில் சிகிச்சையளிப்பதற்கும்ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நேற்றையதினம், புற்றுநோயாளர் தொடர்பாகவெளியான செய்தியில் மகரகம ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்ற தமிழ்நோயாளர்களை சிங்கள சிற்றூழியர்களால் துன்புறுத்தப்பட்டார்கள் என்பது பாஷை புரியாமையால் ஏற்பட்ட தப்பெண்ணமாகும் என்று லயன்ஸ் கழக பிரமுகர் ஒருவர் கூறினார். அங்குகடமையாற்றும் சிங்கள சிற்றூழியர்களுக்கு தமிழ் தெரியாது; தமிழ் நோயாளிகளுக்கு சிங்களம் தெரியாது அவர்கள் கலகலப்பாகப் பேசிக்கொள்வதை இவர்கள்தவறாகப்புரிந்துகொண்டு குறைபட்டுள்ளனர் என்றார் அவர்.

வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் தணிகாசலம் மகரகம ஆஸ்பத்திரியில் சகல இன நோயாளிகளின் குறைகளையும் நன்கு அறிந்து பாரபட்சமற்ற சேவையை செய்யுமாறு பணித்திருக்கும்போது இப்படியான சம்பவம் நடைபெறமுடியாது என சென்றவாரம் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

அடுத்தவாரம் அனுப்பப்படவிருக்கும் நோயாளர் குழுவில் செல்லவிரும்புபவர்கள் யாழ். லயன்ஸ்கழக காரியதரிசி லயன் இமானுவல் ஆர். ஜோசவ்வுடன் சிலோன் மேர்ச்சன்ட் லிமிட்டெட் ஆஸ்பத்திரி வீதி என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

(கெ)

## லயன்ஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனை இலவச துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், நாவாந்துறையில் கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல், கைதடியில் குருடர் செவிடர் பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் படக்காட்சி, வயோதிபர்களுக்குக் கொழும்புத்துறையில் ஆலோசனைகள் முதலியன மேற்கொள்ளப்படும்.

இம்மாதம் 14, 15ந் திகதிகளில் பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதிச் சபையுடன் இணைந்து லயன்ஸ் கழகமும், லயன்ஸ் மாதர்களும் நிதி திரட்டுவர்.

15ந் திகதி காலை யாழ்ப்பாண வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பார்வை குறைந்தவர்களுக்கு 'வைத் கேன்' தினத்தையொட்டி வெள்ளைப் பிரம்புகள் அன்பளிக்கப்படும். பிரம்புகள் தேவைப்படுவோர் லயன்ஸ் கழகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

19ந் திகதி யாழ்ப்பாண வைத்தியசாலையில் லயன்ஸ் டாக்டர்கள் நோயாளர்களைப் பார்வையிடுவர் 20ந் திகதி முத்துத்தம்பி அநாதை இல்லத்தில் சரஸ்வதி பூஜை கொண்டாடுவர். (கெ)

## தேசிய அரசுப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கைகளும் வரிக்குவரி ஒத்திருக்கின்றன, என்றார்.

திரு. பிரேமதாசா இப்படிக் கூறியதும், சபாநாயகர், தான் இதில் தீர்ப்புக் கூறுவதாகக் கூறி திரு. பிரேமதாசாவை அமரச் சொன்னார்.

பத்திரிகையில் வெளியான அறிக்கை பற்றி பேரவைக்கு பிரச்னை இல்லை என்றும், அத்தனகலை உறுப்பினர் தாமே அறிக்கை தொடர்பான முழு உரிமையையும் ஏற்றிருப்பதால் யார் பெயரில் பத்திரிகையில் வெளியாகியிருந்தாலும் அவர் அறிக்கையை இங்கு வாசிக்கலாம் என்றும் சபாநாயகர் தீர்ப்புக் கூறினார்.

திரு. பிரேமதாசா மீண்டும் எழுந்து, இங்குதான் சிக்கல் இருக்கிறது. சபாநாயகர் அவர்களே! அறிக்கையை அத்தனகலை உறுப்பினரிடமிருந்து பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கையாடினாரா? அல்லது பீலிக்ஸிடமிருந்து அத்தனகலை உறுப்பினர் கையாடினாரா? என்றதும் மீண்டும் சபையில் சிரிப்பு எழுந்தது.

சபாநாயகர், 'அது அவர்களது கட்சியின் உள்விவகாரம்' என்றார். மீண்டும் சிரிப்பு.

இதனைத் தொடர்ந்து திருமதி சிறிமாவோ அறிக்கையை வாசித்தார்.

ஒரு கட்சியைச் சார்ந்த ஜனாதிபதி பதவியிலிருக்கையில் வேறொரு கட்சி ஆட்சிக்குவரின் பல குழப்பங்கள் ஏற்படும் என்றும் ஜனாதிபதி பேரவையையே கலைத்து விடலாம் என்றும் அவரே வெற்றி பெறுவாரென்றும் கூறிய திருமதி பண்டாரநாயக்கா, சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கும் இத்திருத்தம் மீதான விவாதத்தில் தாம் கலந்து கொள்ள விரும்பவில்லை என்று கூறி அமர்ந்தார்.

### பிரதமர் கூறியது

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, இப்பொழுது இங்கு விவாதந்தான் நடந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். அவரைத் தொடர்ந்து அத்தனகலை உறுப்பினர் அதில் பங்குபற்றினார். அவர்கள் ஏன் விவாதத்தில் பங்குபற்றவில்லை என்பதை கூடிப்போய் தமதுகருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள்; அவர்களது பேச்சுக்கள் குறிப்பேட்டில் பதிவாகியிருக்கின்றன. நாம் அவற்றைக் கேட்டிருக்கின்றோம் 'நாம் அது பற்றி ஆலோசிப்போம்'' என்றார் சபையில் அப்போதும் சிரிப்பு எழுந்தது.

அடுத்து சபைமுதல்வரும் பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சருமான திரு. ஆர் பிரேமதாசா பேச எழுந்தார் அப்போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எழுந்து முன்னே செல்ல அவரைத் தொடர்ந்து அவரதுகட்சிஉறுப்பினர்கள் அனைவரும் சபையை விட்டு வெளியேறினர். சபையில் திரு.அனுரா பண்டாரநாயக்கா தவிர ஏனைய 8பேரும் அன்று சமுகமளித்திருந்தனர். அவர்கள் வெளியேறிய சமயம் ''வெட்கம், வெட்கம்!!'' என்று சபையில் பெரும் கூச்சல் எழுந்தது. திருமதி சிறிமாவோ எதிர்க்கட்சிப்பக்கத்தின் பின்வரிசையிலிருந்த அரசாங்க உறுப்பினரை பார்த்துச்சிரித்தபடியே சபையை விட்டு வெளியேறினார்கள்.

தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் தொடர்ந்தும் சபையில் இருந்தனர்.

(—நாளை தொடரும்)

### இந்த ஆசிரியர்கள்

## சம்பளத்தை பெறுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,வெள்ளி

நுவரெலியா மாவட்ட இடம்பெயர்ந்த தமிழ் ஆசிரியர்கள் தமது செப்டம்பர் மாதச் சம்பளத்தை இன்று யாழ். கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கம் எடுத்த நடவடிக்கையின்பேரில் மேற்படி ஆசிரியர்களின் செப்டம்பர் மாதச் சம்பளம் இங்கு வழங்கப்பட்டு சென்ற புதன் கிழமை முதல் ஆசிரியர்கள் வேதனங்களை இங்கே பெற்று வருகின்றனர்.

நுவரெலியா மாவட்ட கல்விப்பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்ட படிவத்தை நிரப்பிக்கொண்டுவருவதன் மூலம் சிரமங்கள் குறையலாம் என்றும் சங்கம் தெரிவிக்கிறது. (கா)

## பூதவுடல் தகனம்

கொழும்பு,வியாழன்

ஜனாதிபதியின் துணைவியாரான காலம்சென்ற திருமதி சீலாவதி கோபல்லாவையின் பூதவுடல் இன்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இறுதிச்சடங்கின் போது பெருந்திரளான மக்களும், பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர்.

## வேலைக்குத் திரும்பினர்

யாழ்ப்பானம்,வெள்ளி

வல்லை இலங்கை நூற்றல் நெய்தல் ஆலையில் நேற்று முன்தினம் வேலைநிறுத்தத்தில் குதித்த ஊழியர்கள் நேற்று வேலைக்கு திரும்பினர்.

ஆலைநிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர்.

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து பொன்னம்மா

உடுவில் தெற்கு தம்பிமுத்து பொன்னம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பிமுத்துவின் மனைவியும், இளைப்பாறிய ஆசிரியர் பரராஜசிங்கம், அரசரத்தினம், திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேஸ்வரி,வைத்திலிங்கம் கந்தையா (யாழ் கச்சேரி குடும்பநலத் திட்ட அதிகாரி) ஆகியோரின் மாமியும், ஸ்ரீராம் (கணக்காளர், இங்கிலாந்து), டாக்டர் கலைவாணி தியாகராசா (யாழ் வைத்தியசாலை), சிவநங்கை சற்குணம் (இங்கிலாந்து), இராமநாதன் (விவசாய அதிகாரி, அம்பாறை), டாக்டர் புனிதவதி ஸ்ரீகணேசன் (திருகோணமலை வைத்தியசாலை), விசாகானந்தன், ஸ்ரீகாந்தா (யாழ். தேர்தல் அலுவலகம்), ஸ்ரீதரன் ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைக்காக இன்று நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தயவு செய்து இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். 7335

## மரண அறிவித்தல்

### திருமதி ச. செல்லம்மா

காலஞ் சென்ற C. A. சண்முகத்தின் மனைவி செல்லம்மா காலமாகிவிட்டார். இவர் புவனேஸ்வரி, மகேஸ்வரி, கனகேஸ்வரி, ருஜேஸ்வரி, கருணைறட்னம் (கணக்காளர் பெறி ஜேம்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற நவரட்னராஜா (கோப்றேற்றிவ் இன்ஸ்பெக்டர்), T. S. ஆனந்தக்குமாரசாமி (சட்டத்தரணி), காலஞ்சென்ற தர்மறட்னம் (S. H. S. office), காலஞ்சென்ற சுவாமிநாதன் (சிறுப்பர்), ஜோதிமலர் ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை 7-10-77. 11 மணியளவில் குடும்பமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். கணகிரி, இருபாலை கோப்பாய். 7331